**IN THE COURT OF III ADHOC JUDGE**

**City Civil Court Chennai -104**

**PW1:N.G.Ramanathan OS. NO:6281/2015 DATE:24.07.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறார்.

நான் பிரமாணவாக்குமூலத்தில் 05.01.1999 அன்று 1ம் பிரதிவாதி கலியபெருமாள் அடியாட்களுடன் வந்து என் மனைவியை மிரட்டி கையொப்பம் பெற்று சென்றுவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இவ்வாறு கட்டாயப்படுத்தி கையொப்பம் பெற்றதற்கு police ல் புகார்ரோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கில் 05.01.1999 அன்று கலியபெருமாள் என்மனைவியிடம் எழுதி வாங்கிய பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ExA8 ஆவணம் xerox copy என்றும் அசல் இல்லை என்றால் சரிதான். இந்த புகாரை பேருந்து நடத்துனர்கொடுத்தார். இந்த புகாரில் அடையாளம் தெரியாத நபர்கள் என்று குறிபிடபட்டுள்ளது என்றால் சரிதான். இந்த புகாருக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த புகாரின்மேல் மேல் நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது. மேல் நடவடிக்கை எடுத்தற்கான ஆதாரம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்பது எனக்கு தெரியாது. Ex.A9 ஆவணத்தில் என்னுடைய மனைவி காவல் நிலையத்தில் புகார்கொடுத்ததாக குறிபிடபட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணம் xerox copy தான். இந்த ஆவணத்தை காவல் நிலையத்தில் சமர்பித்தற்கு அத்தாட்சி எதுவும் இல்லை என்றால் எனக்கு ஞாபகம்

இல்லை. இந்த புகார் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக என்மனைவி தயார் செய்தது என்றால் சரியல்ல. Ex.A10 ஆவணம் நகல் என்றால் சரிதான். இந்த ஆவணத்தை police கொடுத்தனர் என்பதற்கு காவல் துறை முத்திரை இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் தேதி 16.12.1998 என்று உள்ளது என்றால் சரிதான். என்னுடைய மனைவி புகார் கொடுத்ததாக உள்ள தேதி 15.12.1998 எனவே என் மனைவியின் புகாருக்கும் ExA10 ஆவணத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ExA11 ஆவணம் தந்திமூலமாக அனுப்பட்டது என்பதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணமும் நகல் தான். ExA12 ஆவணமும் நகல் தான். இந்த ஆவணம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்க்கு அனுப்பட்டது என்பதை நிரூபிக்க ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல ExA13 அசல் ஆவணம் அல்ல நகல்தான். இந்த ஆவணம் கடலூர் மாவட்ட ஆட்சியர்க்கு அனுப்பட்டது என்பதை நிரூபிக்க ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. ExA14 ஆவணமும் நகல் தான். இந்த ஆவணம் மோட்டார் வாகன ஆய்வாளர் கொடுத்தார் என்பதை நிரூபிக்க நீதிமன்றத்தில் அத்தாட்சி தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் TN31B.6559 பேருந்து தான் உள்ளது என்றும் TN31A9005 இந்த பேருந்தை பற்றி வழக்கில் குறிப்பிடபடவில்லை என்றால்அந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. ExA14,15 ஆவணங்கள் நகல்கள்தான் என்றால் சரிதான். இந்த ஆவணங்கள் என்னோடைய கைக்கு எப்படி வந்தது என்று என்னுடைய வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். ExA16 ஆவணத்தின் படி என்னுடைய மனைவிக்கும் கலியபெருமாளுக்கும் நிதிபிரச்சனை காரணமாகதான்

பிரச்சனை ஏற்பட்டது என்று குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ExA17 ஆவணம் நகல் என்றால் சரிதான். இதன் அசல் என்ன ஆயிற்று என்று பிரமாணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த கடிதம் கடலூர் RDO பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சி சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். ExA20 ஆவணத்தில் உயர் நீதிமன்றதம் பத்தி 24 ல் என்மனைவியையும் கலியபெருமாளையும் வேறு நீதிமன்றம் அனுகி பரிகாரம் தேடிகொள்ளும் படி கூறியது சரிதான். உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த writ மனுவில் என்மனைவி கலியபெருமாளை தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்துவிட்டு பின்னர் அவர் நீதிமன்றத்தால் தரப்பினராக சேர்க்கபட்டார் என்றால் சரிதான். என்மனைவி 1ம் பிரதிவாதிக்கு தெரியாமால் உத்திரவு பெறவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.ExA21 ஆவணத்தை பற்றி பிராதிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்திலோ கூறாமால் தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனக்கு அது கவனம் இல்லை. இந்த ஆவணத்திற்கும் வழக்கிற்கும் என்ன சம்மந்தம் என்று என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்இடை வழக்கு பற்றி கூறவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்த counter claim எதிர்த்து பிரமாணவாக்குமூலத்தில் நான் ஏதும் கூறவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் 1988,1999 ல் அரசு ஊழியராக இருந்தேன். நான் அரசுஊழியராக அந்த சமயத்தில் இருந்ததால் வழக்கு விவரங்கள் நேரிடையாக தெரியாது என்றால் எனக்கு தெரியும். பேருந்து பதிவு எண் TN31B6559 என்ற பேருந்தை வாங்குவதற்கு Indo Asian finance நிறுவனம்

முழுபணம் கொடுத்தற்கு அத்தாட்சி இல்லை என்றால் சரிதான். இந்த பங்குதார்நிறுவனம் இயங்கிகொண்டிருக்கும்போது பேருந்து உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபட்டதால் ExA7 notice கொடுக்கபட்டது, என்றால்notice கொடுக்கபட்டது ஆனால் உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபடவில்லை . ExA7 notice உள்ள விவரங்கள் தவறு என்று குறிபிட்டு பதில் அனுபவில்லை என்றால் சரிதான். நிதிப்பிரச்சனை காரணமாகதான் பேருந்து TN31B6559 1ம் பிரதிவாதி வசம் இருந்தது என்றும் இதைதான் ExA16 RDO அறிக்கையிலும் கூறப்பட்டுள்ளது என்றும் நான் கூறுவதபோல 1ம் பிரதிவாதி பேருந்தை கடத்தி எடுத்து சென்றார் என்றால் பேருந்தை 1ம் பிரதிவாதி கடத்திதான் எடுத்து சென்றார். வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கு இடையில் உள்ள பங்குதாரர் நிறுவனம் இன்றைய தேதிவரை நிலுவையில் உள்ளதால் நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கோரியுள்ளேன் பங்கு தாரர் நிறுவனம் De funct ஆகி விட்டது. De funct ஆகிவிட்டதற்கு நான் ஏதும் அத்தாட்சி தாக்கல் செய்யவில்லை என்றால் உயர் நீதிமன்ற உத்திரவை நான் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி எதிராக வாதிகோரியுள்ள எந்த பரிபாரமும் அவருக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கலியபெருமாளுக்கு பேருந்தில் இருந்து எந்த பணமும் கொடுக்காததால் வழக்கில் வாதி,1ம் பிரதிவாதியிடம் இருந்து 3ல் ஒருபங்கு பேருந்தில் இருந்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல ,வழக்கில் கேட்டுள்ள 6ம்,7ம் பரிகாரம் ஒன்றுக்குஒன்று முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் கூறியுள்ள விவரங்களை ஆவணங்கள் மூலம் நிரூபிக்காத தாலும் பங்குதாரர் நிறுவனம் இன்று

வரை நிலுவையில் இருப்பதாலும் வழக்கில் வாதிக்கு குறிய பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. கலியபெருமாள் எதிர்வழகுரையில் கேட்டுள்ள பரிகாரம் குறித்து எந்த விவரமும் பிரமாணவாக்குமூலத்தில் கூறததாலும், அதை மறுத்து ஆட்சேபனை தாக்கல் செய்யததாலும், அவர் எதிர்வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை,**